**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RANIPET**

**CC.NO. 46/2025 LW- 4 PW-3**

| | |
|---|---|
| Name | பாலமுருகன் |
| Husband/Father Name | பழனிவேல் |
| Village /Area | |
| Taluk | |
| Occupation | சிறப்பு உதவி ஆய்வாளர், ராணிப்பேட்டை காவல் நிலையம் |
| Age | |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of date 06.03.2026 சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**(எதிரிஆஜரில் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் தற்போது சிறப்பு உதவி ஆய்வளராக ராணிப்பேட்டை காவல் நிலையத்தில் பணி புரிந்து வருகிறேன். உதவி ஆய்வாளர் திரு.சீனிவாசலு என்வரின் கையெழுத்து எனக்கு நன்கு தெரியும் என்பதன் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் அவருக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 23.04.2021 அன்று காலை 06.00 மணியளவில் இராணிப்பேட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. சீனிவாசலு அவர்களின் நிலைய பொறுப்பில் இருந்த போது அவரும், சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.இருசப்பன் மற்றும் முதல் நிலை காவலர் சரவணன் ஆகியோருடன் சட்டம் ஒழுங்கு மற்றும் குற்ற தடுப்பு தொடர்பாக இராணிப்பேட்டை வேலம் புதிய காலணி பேருந்து நிறுத்தம் அருகே

கண்காணித்து கொண்டு சென்ற போது எதிரே வந்த அசோக் லைலாண்ட் லாரி TN 05 R 0839 பதிவெண் கொண்ட வாகனத்தை நிறுத்த முற்பட்ட போது அதிலிருந்து ஒரு நபர் இறங்கி ஓடி விட்டார்.

பின்பு அவரை பிடித்து விசாரித்த போது அவர் தனது பெயர் குமரேசன் என்று தெரிவித்துள்ளார். அவர் ஓட்டி வந்த வாகனத்தில் அரசு அனுமதியில்லாமல் வேலம் ஏரியிலிருந்து மண்ணை திருடி வந்ததாக ஒப்புக்கொண்டவரை காலை 6.05 மணியளவில் காரணம் கூறி கைது செய்துள்ளார்.

பின்பு அவர் ஓட்டி வந்த லாரியிலிருந்த 2 யூனிட் ஏரி மண் மற்றும் லாரியை கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றி அங்கு தனிநபர் சாட்சிகள் யாரும் இல்லாததால் அவருடன் சென்ற சிறப்பு உதவி ஆய்வாளர் இருசப்பன் மற்றும் முதல் நிலை காவலர் சரவணன் ஆகியோருடன் சாட்சி கையொப்பம் பெற்றுள்ளார். அந்த கைப்பற்றுதல் மகசர் **அ.சா.ஆ.7 ஆக குறியீடு** செய்யப்படுகிறது.

பின்பு அதே சாட்சிகள் முன்பு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். அந்த பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே **அ.சா.ஆ.8 மற்றும் 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு அதே சாட்சிகள் முன்பு காலை 9.00 மணியளவில் கைப்பற்றப்பட்ட 2 யூனிட் ஏரி மண்ணை வேலம், புதூர் ஏரியில் கொட்டி அழிப்பு மகசர் தயார் செய்துள்ளார். அந்த அழிப்பு மகசர் **அ.சா.ஆ. 10 குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்து மற்றும் எதிரியுடன் நிலையம் ஆஜராகி நிலைய குற்ற எண்.170/2021 **இ.த.ச. பிரிவுகள் 379, 430** முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்துள்ளார். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ. 11 குறியீடு செய்யப்படுகிறது.** கைது செய்யப்பட்ட எதிரியை நீதிமன்ற

காவலுக்கு உட்படுத்தியுள்ளார். பின்பு கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான அசோக் லைலாண்ட் லாரி TN 05 R 0839 இவற்றை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். **அந்த படிவம் 91 அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு சொத்தான லாரி **ச.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு அவர் தனது புலன் விசாரணையை நிறைவு செய்து எதிரி மீது **இ.த.ச. பிரிவுகள் 379, 430**ன் கீழ் இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் உதவி ஆய்வாளர் தான் புகார்தாரர் மற்றும் விசாரணை அதிகாரி என்றால் சரிதான். இந்த வழக்கு தொடர்பாக தனிநபர்களோ, கிராம நிர்வாக அலுவலரோ, பொதுப்பணித்துறையினரோ புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். ரோந்து பணி தொடர்பாக தான் சம்பவ இடம் சென்றுள்ளார்கள் என்றால் ஆமாம். மணல் திருட்டு தொடர்பாக ரோந்து பணி சென்றோம். சம்பவம் இடம் எப்படி சென்றார்கள் என்றால் இருசக்கர வாகனத்தில் சென்றுள்ளார்கள்.

சம்பவ இடம் எத்தனை மணிக்கு சென்றார்கள் எவ்வளவு நேரம் இருந்தார்கள் என்றால் காலை 6.00 மணிக்கு சென்று 6.30 மணிவரை சம்பவம் இடத்தில் இருந்துள்ளார்கள். எதிரியை கைது செய்த பின்னர் என்ன செய்தார்கள் என்றால் கைபற்றுதல் மகசர் மற்றும் பார்வை மகசர் மற்றும் அழிப்பு மகசர் தயார் செய்துள்ளார்கள். வாகனத்தின் உரிமையாளர் பற்றி விசாரணை செய்யப்பட்டுள்ளதா என்றால் செய்துள்ளார்கள். வாகன உரிமையாளர்களின் விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். கைபற்றிய வாகனத்தின் பதிவெண் மற்றும் மாடல் பற்றி தான் குறிப்பிட்டுள்ளது. அதன் நிறம் பற்றி எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

சம்பவ இடம் குடியிருப்பு பகுதிகள் நிறைந்த இடம் என்றால் சரிதான். அப்படி இருக்க தனிநபர் சாட்சிகளை ஏன் சேர்க்கவில்லை என்றால் சரிதான். அட்சமயத்தில் யாரும் இல்லை என்பதால் தனிநபர் சாட்சிகள் இல்லை. அழிப்பு மகசர் தயார் செய்யப்பட்டுள்ளது. ஆனால் எந்த இடத்தில் கொட்டி அழிக்கப்பட்டது என்ற புகைப்படமோ, வரைபடமோ இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் மாதிரிக்கு மணல் எடுக்கப்படவில்லை என்றால் சரிதான்.

எதிரியை கைது செய்து காவல் நிலையத்திற்கு வந்து குற்ற எண் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். ஆனால் சம்பவ இடத்தில் தயார் செய்த பார்வை மகசர் மற்றும் வரைபடத்தில் குற்ற எண் குறிப்படிபட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தை அழித்து அழிப்பு மகசரை தயார் செய்ய உதவி ஆய்வாளருக்கு அதிகாரம் இல்லை என்றாலும் ஆய்வாளர் தான் அதற்குரிய அதிகாரி என்றாலும் இவ்வழக்கில் ஆய்வாளரிடம் அனுமதி பெற்றதற்கான எந்த ஆவணமும் சமர்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிககையிலும், இறுதி அறிக்கையிலும் கைப்பற்றபட்ட மணல் அழிக்கப்பட்டதற்கான எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான்.

எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் தொடர்பு இல்லை என்றாலும் சொன்ன தேதியிலும் சொன்ன நேரத்திலும் சம்பவ இடம் செல்லவில்லை புள்ளிவிர கணக்கிற்காக எதிரிகள் மீது தவறாக வழக்கு பதிவு, வழக்கிற்காக அனைத்து ஆவணங்களையும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்து சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் எதிரிகள் மீது தவறான இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

SADASIVAM POORNIMA

Digitally signed by SADASIVAM POORNIMA
DN: cn=SADASIVAM POORNIMA, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

District Munsif cum Judicial Magistrate,

Ranipet.